ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2104/6 - 2018 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2018.12.31

*2104/6 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பு

அதியுத்தமராம் சனாதிபதியின் பணிப்பின் வண்ணம், 1979 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந் திகதிய 48/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் இடையிடையே திருத்தப்பட்டதுமான செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பை 2018.10.26 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மேலும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்துவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் பணித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,<br>
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதியின் அலுவலகம்,<br>
கொழும்பு 01,<br>
2018, திசெம்பர் 27.

**அட்டவணை**

1. செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பின் 4 ஆம் உறுப்புரையை அடுத்து பின்வரும் உப உறுப்புரை இத்தால் சேர்க்கப்படுகின்றது :-

4 (அ) தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணத்தின் பேரில் அதாவது “ஒழுக்காற்று விடயம் அல்லாததொரு காரணம், அமைச்சரவைத் திருத்தம் அல்லது பாராளுமன்றம் அல்லது அமைச்சரவை கலைக்கப்படல் காரணமாகப்” பதவிகளை இழக்க நேரிடுகின்ற செயலாளரொருவர் அப்பதவியை இழக்கும் திகதியில் அமைச்சுச் செயலாளர் பதவியில் குறைந்தபட்சம் ஒருவருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவிடத்து,

(i) கட்டாய ஓய்வு பெறும் வயதை அடையும் வரையிலான மீதிச்சேவைக்காலம் ஒரு வருடமோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருப்பின் அத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் செயலாளர்களது பிரமாணத்தின் (4) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சேவையிலிருந்து ஓய்வுபெறும்போது 60 வயதுவரை சேவையில் இருந்ததாகக் கருதி ஓய்வுச் சம்பளங்கள், ஏனைய சகல படிகள் மற்றும் சிறப்புரிமைகளை உரித்தாக்குதல்:

1A - G 29168 — 22 (2018/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ii) அதேபோன்று செயலாளர்களது பிரமாணத்தின் (5) ஆம் உறுப்புரைக்கமைய தான் முன்னதாக இருந்த சேவைக்கு அல்லது பதவிக்கு மீண்டும் நியமிக்கப்படுவதாயின், செயலாளர்களது பிரமானத்தின் 5(அ) ஆம் உறுப்புரைக்கமைய நிறுத்தி வைத்திருக்கக் கூடிய சேவை மூப்பு, சம்பள அளவுத்திட்டம் மற்றும் அதற்கு மேலதிகமாக அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் 2018.05.23 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/9/11 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் மூலம் அமைச்சுச் செயலாளர்களுக்காக வழங்கப்பட்ட ஓய்வுச் சம்பளத்துடன் கூடிய விசேட படியையும் உரித்தாக்குதல்.

*01- 300*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.